31.10.2023

அனைவருக்கும் வணக்கம்,

எனது பெயர் வித்யாதரசர்மா இராதாகிருஷ்ணராஜாக் குருக்கள், நான் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தில் வளாகப் பொறுப்பாளராகப் பணியாற்றுகின்றேன். எமது 20வது ஆண்டுவிழா கடந்த தை மாதம் 28.012023 அன்று நடைபெற்றது. அதற்கு சில நாட்களின் முன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் என்னை உரையாட அழைத்திருந்தார்கள்.

வளாகம் சார்ந்து அழைக்காமல், பொதுப்பணியில் இருக்கும் ஒரு தனிப்பட்ட நபராக அழைத்துக் கதைக்க விரும்புவதாகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நிதிப்பொறுப்பாளர் அழைத்தார். எனது உடல்நிலையும் நன்கு சரியாக இல்லை என்பதனால் ஆண்டுவிழா நிறைவுபெற்றதும், மருத்துவத்திற்காக வெளிநாடுசெல்லமுன் தங்களைச் சந்திப்பதாகத் தெரிவித்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரை மதித்து 06.02.2023 அன்று தகவல் வழங்கி, மறுநாள் 07.02.2023 அன்று இது எனது தனிப்பட்ட சந்திப்பு என்பதை அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும் கூறிவிட்டு அச்சந்திப்பில் கலந்து கொண்டேன்.

அங்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் தங்கள் செயற்பாடுகளையும் அன்னையின் செயற்பாடுகளையும் எமது வளாகத்தில் இடம்பெற்ற சில விடயங்களையும் பற்றித் தவறான புரிதலுடன் கூறினர். அந்தச் சந்திப்பிலே ஒரு அன்னை பூபதி வளாகப்பொறுப்பாளர் என்ற முறையில் நான் கலந்து கொள்ளவில்லை அத்தோடு வளாகம் சார்ந்த விடயங்களை கதைப்பதற்கு சரியான இடம் இது இல்லை என்பதனால், எனது பதில் தாங்கள் பல தவறான புரிதலுடன், பல பிழையான தகவல்களைச் சேகரித்துப் பலவிடயங்களைக் கூறியுள்ளீர்கள். தற்போது நான் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கு மதிப்புக் கொடுத்து தனிப்பட்ட முறையில் வருகை தந்துள்ளேன், தங்களுக்கு அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகத்தின் விளக்கம் அல்லது தகவல் தரவேண்டுமாயின் எம்மை நிர்வாகமாக அழைக்கவும் என்றும் கூறி விடையேறினேன். இத்தகவலையும் அன்றே ஏனைய எனது சக நிர்வாக உறுப்பினர்களுக்கும் வழங்கிவிட்டேன்.

இச்சந்திப்பினைப் பற்றி வெளியில் யாருக்கும் சொல்லக்கூடாது என்பதனை அவர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் நான் கூறவில்லை என்பதனை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

இவ்வண்ணம்

வித்யாதரசர்மா இராதாகிருஷ்ணராஜாக் குருக்கள்

நிருவாகப் பொறுப்பாளர்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகம்